ORIGINAL ARTICLE

# திருக்குறள் கற்றலின் வழி படிவம் 2 மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்

## [THIRUKKURAL KADRALIN VALI PADIVAM 2 MAANAVARKALIN UYARNILAIC SINTANAIT THIRANAI MEEMPADUTTUYAL]

## IMPROVING THE LEVEL OF HOTS (HIGHER ORDER THINKING SKILLS) OF FORM 2 STUDENTS BY LEARNING THIRUKKURAL

**ரெனித்தா பிரேரா வின்சன் [1] / Renita Prera Winsen [1]**

[1]புக்கிட் மெர்டாஜாம், பினாங்கு, மலேசியா/ Bukit Mertajam, Penang, Malaysia.
மின்னஞ்சல் / Email: renita.prera@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/08

**ஆய்வுச் சாரம்**

பேராக் மாநிலத்தில் தைப்பிங் மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் திருக்குறள் கற்றலின் வழி படிவம் 2 மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தும் முயற்சியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாணவர்கள் இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்டனர். திருக்குறளில் மாணவர்களின் ஆளுமையைக் கண்டறிய அந்த இடைநிலைப்பள்ளியின் தமிழாசிரியரிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த படிவம் 1 மற்றும் படிவம் 2-இல் வரையறுக்கப்பட்ட ஆறு திருக்குறள்கள் தேர்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குறள்கள் யாவும் சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியலின் துணைக்கொண்டு பலதரப்பட கேள்விகள் தயாரிக்கப்பட்டது. ஆறு வாரத் திருக்குறள் வகுப்பிற்குப் பின் இக்கேள்விகள் யாவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. கேள்விக்கான பதில்களிலிருந்து மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனில் ஏற்பட்ட மாற்றங்கள் கண்டறியப்பட்டது. ஆய்வின் முடிவாக, முறையான திருக்குறள் கற்றலின் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியும் என்பது உறுதிச் செய்யப்பட்டது.

**கருச்சொற்கள் :** திருக்குறள், உயர்நிலைச் சிந்தனைத் திறன், ஆளுமை, சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியல், கேள்விகள்.

**Abstract**

This study has been conducted with the purpose of improving the level of HOTS (Higher order thinking skills) of Form 2 students through learning Thirukkural. For this study, the Thirukkural, a well-known literary work of Tamil Language was taken. Thus, this research was carried out in a secondary school which is located at Taiping, Perak. The research was carried out under the design of action research. The sample of this study consisted of ten Form 2 students. Besides that, a teacher also interviewed in order to know the students' personality in learning Thirukkural. In this research, the learning process of Thirukkural approach was implemented for 6 weeks. There are 6 couplets of Thirukkural selected according to the syllabus of Form 1 and Form 2. This six couplets of Thirukkural used to test the level of HOTS. The questions were created based on Thirukkural, according to Revised Bloom's Taxonomy. The data of the study was collected through pre-test, the questions asked in Thirukkural classes and post-test via qualitative and quantitative data collection tools. The findings obtained through qualitative and quantitative data collections showed that the level of HOTS through learning Thirukkural among Form 2 students has improved.

**Keywords:** Thirukkural, Higher order thinking skills, Personality, Revised Bloom's Taxonomy, Questions

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 11th September 2018, revised 30th September 2018, accepted 15th October 2018

## முன்னுரை

தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றியுள்ளன. ஒவ்வோர் இலக்கியமும், ஒவ்வொரு குறிக்கோளை எடுத்தியம்புகின்றது. இவ்விலக்கியங்களைக் கல்வியின் வாயிலாகப் புகுட்டும் போதே அதன் சிறப்பு மேலோங்கி காணப்படுகின்றது. தற்போதைய காலக்கட்டத்தில் கல்வி ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்கு அடிப்படையாக விளங்குகின்றது. கல்வியினால் பெறப்படும் அறிவு, ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கு ஏணிப்படியாக விளங்குகின்றது எனலாம். கல்வியின் வாயிலாகவே ஒரு மனிதரின் சிந்திக்கும் ஆற்றலை மேலோங்கச் செய்ய முடியும் (பழனிவேலு, ஞா. 2009).[1]

விரைவான தொழில்நுட்ப மாற்றங்களைக் கண்டு வரும் இவ்வுலகில், எதனையும் உயர்ந்தச் சிந்தனைப் படிநிலையில் சிந்திக்கும் ஆற்றல்மிக்க ஒருவராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் போட்டி நிறைந்த இவ்வுலகில் நாம் ஈடுகொடுக்க முடியும். எந்நோக்கில்

பார்த்தாலும், எதனைக் கற்றாலும் சிந்தனையின் செயல்பாடின்றி கல்வி சீர்படாது; செம்மையுறாது (ரொஸ்லான் பாகி, 2013) (Roslan Baki, 2013).[2] காலவோட்டத்தில் இப்பரிணாம வளர்ச்சி முதிர்ச்சியுற்று வந்துள்ளதையும் காணமுடிகின்றது. மேற்கத்திய தத்துவ ஞானிகளும் சிந்தனைத் திறனைப் பல்வகையில் வலியுறுத்தியுள்ளதோடு, கையாண்டும் வந்துள்ளனர் (அனி ஹஜி ஓமார், 2013) (Ani Haji Omar, 2013).[3]

பென்ஜமீன் புளும் சிந்தனைத் திறனை இரண்டு வகையாகப் பிரித்து அதனை ஆறு படிநிலைகளாக வகுத்துக் கூறியுள்ளார். உயர்நிலைச் சிந்தனை மற்றும் கீழ்நிலைச் சிந்தனை என இரு வகையாக வரையறுத்துள்ளார். கீழ்நிலைச் சிந்தனையைக் காட்டிலும் ஒருவனுக்கு உயர்நிலைச் சிந்தனையே மிகவும் அவசியம் என்று இவர் குறிப்பிட்டுள்ளார் (பென்ஜமீன் புளும், 1956) (Benjamin Bloom,1956).[4]

.

புதிய பாடத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்ட காலந்தொட்டே மலேசியக் கல்வி அமைச்சால் பள்ளிகளில் உயர்நிலைச் சிந்தனைகள் முக்கியத்துவம் பெறலாயின. உயர்நிலைச் சிந்தனைகளை ஆசிரியர்கள் அவசியம் தங்கள் கற்றல் கற்பித்தலில் செயல்படுத்த வேண்டும் என்பது மலேசியக் கல்வியமைச்சின் தலையாயக் கோரிக்கையாகும். எதிர்கால வாழ்வில் எற்படும் சவால்களைச் சமாளிப்பதற்கு இன்றே உயர்நிலைச் சிந்தனைகளைப் பற்றியப் புரிதலும் செயல்பாடும் அனைவருக்கும் மிக அவசியமாகும் (இராஜேந்திரன், 2008) (Rajendran, N. 2008).[5] அவ்வகையில் இலக்கியத்தின் வாயிலாக மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேலோங்குவதற்கும், இலக்கியத்தை இனிமையாகச் சுவைப்பதற்கும் அதன் மீதூர்ந்து மேலும் ஆழ்நிலைக்கு இட்டுச்சென்று உய்த்துணரச் செய்வதற்கும் இலக்கியம் கற்றல் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைகள் கட்டாயம் செயலாக்கம் பெறவேண்டுவது முக்கியமாகும். எனவே, திருக்குறள் கற்பித்தல் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு இரண்டு நோக்கங்கள் முன்வைக்கப்பட்டது. அவை யாதெனில்:


i. திருக்குறள் கற்றலில் படிவம் 2 மாணவர்களின் ஆளுமையைக் கண்டறிதல்.
ii. திருக்குறள் கற்பித்தல் வழி படிவம் 2 மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்.

**ஆய்வு அணுகுமுறை**

அணுகுமுறை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கு முறையாக அணுகுவது அல்லது நெருங்குவது என்று பொருள்படும் (எஸ்லி, 1972) (Hesly, S. 1972).[6] அவ்வகையில் "திருக்குறள் கற்றலின் வழி படிவம் 2 மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்" எனும் ஆய்விற்கான தரவுகள் பண்புசார் அணுகுமுறையை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் கருத்தறிவினா நிரல், நடவடிக்கை, உற்றுநோக்கல், நேர்காணல், முன்னறித் தேர்வு மற்றும் பின்னறித் தேர்வு ஆகிய வழிகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மாணவர்கள் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளித்த பதில் மூலம் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும் இந்த ஆய்வின் முதல் நோக்கத்தைப் பூர்த்திச் செய்ய தமிழாசிரியரிடம் நடத்தப்பட்ட நேர்காணல் துணைப்புரிந்தது. நேர்காணல் வழியும் தரவுகள் சேகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வின் தரவுகள் சேகரிக்கப்பட்டப்பின், இத்தரவுகள் யாவும் பண்புசார் அணுகுமுறையின் வழி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. கருத்தறிவினா நிரல் மற்றும் நேர்காணல் வழி கிடைக்கப்பெற்ற தரவுகள் யாவும் விளக்கமுறையிலே விளக்கபட்டுள்ளன. தரவுகளை விளக்குவதற்கு அட்டவணை பயன்படுத்தப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டே ஆய்வின் பகுப்பாய்வுகள் துல்லியதமாக விளக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு கோட்பாடு**

இவ்வாய்விற்குச் சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியல் (அண்டர்சன் மற்றும் கார்த்வோல், 2011) (Anderson & Karthwohl 2011).[7] கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஆங்கிலத்தில் 'Bloom's Revised Taxonomy' என்று அழைப்பர். புளூமின் மாணவரான லோரின் அண்டர்சன் (2011) என்பவர், புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியலில் சிறிய மாற்றத்தினை முன்மொழிந்தார். இன்று பலரும் மதிப்பீட்டில் இதனைப் பயன்படுத்துகின்றனர் (போல், 2000) (Paul, 2008).[8] அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்த்தூக்கிப்பார்த்து மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றலே உயர்நிலைச் சிந்தனைத் திறனாகக் கருதப்படுகின்றது (அண்டர்சன் மற்றும் கார்த்வோல், 2011) (Anderson & Karthwohl 2011).[7] இக்கோட்பாட்டில் இடம்பெற்றுள்ள 6 படிநிலைகளானது மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை அடையாளம் காண துணைப்புரியும். மதிப்பீடுகளில் இதனைப் பயன்படுத்துவது பரீட்சையமான ஒன்று. அவ்வகையில் இந்த ஆறு படிநிலைக்கேற்ப கேள்விகளைத் தயார் செய்து மாணவர்களின் சிந்தனைத் திறனை தூண்ட முடியும் (மணிமாறன், கோ. 2017).[9]




*(அண்டர்சன் மற்றும் கார்த்வோல், 2011)* (Anderson & Karthwohl 2011)[7]

*வரைப்படம் 1:* சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியல்

| | |
|---|---|
| மீட்டறிந்திடு | கருத்தினையோ பொருளினையோ தோற்றத்தினையோ மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருதல் ஆகும். |
| கருத்துணர்ந்திடு | ஒன்றன் பொருளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலைக் குறிப்பதாகும். |
| பயன்கொள் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுந்தாய்ந்திடு | தகவல்களைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அத்தகவல்களை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அதன் பகுதிகளுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடு | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு சீர்த்தூக்கிப் பார்த்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்கு | பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு உருவாக்குதல். |

(மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டம்) (Laporan Awal Pelan Pembangunan Pendidikan Malaysia 2013-2025)[10]

### 1) திருக்குறள் சார்ந்த ஆளுமை

#### அ) ஆசிரியருடன் நடத்தப்பட்ட நேர்காணலின் பதில்

மாணவர்களின் திருக்குறள் அறிவு மற்றும் திறன் குறைவாகவே இருக்கின்றது என்பது ஆசிரியரின் கருத்தாகும். திருக்குறளைத் தேர்வு நோக்கத்திற்காக மட்டுமே கற்பதாகவும் குறிப்பிட்டார். மாணவர்கள் திருக்குறளின் புதைப்பொருளை உள்வாங்கிக்கொள்ள மாட்டார்கள். கட்டாயத்தின் அடிப்படையிலே பயில்கிறார்கள் என்பதனையும் அவர் வலியுறுத்தினார். மேலும், மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை தூண்டுவதற்குத் திருக்குறள் முக்கியப் பங்காற்றுகின்றது என்றும் கூறினார். இக்காலக்கட்டத்தில் மாணவர்கள் தேர்ச்சிப் பெறுவதற்காக மட்டுமே பயில்கின்றனரே தவிற அதனை உள்வாக்கிக்கொள்வதில்லை. எனவே, திருக்குறள் குறித்த அறிவும் திறனும் இவர்களிடையே குன்றியே காணப்படுகின்றது என்பதையும் குறிப்பிட்டார்.

மாணவர்கள் தேர்வுக்குப் பிறகு எந்த திருக்குறளையும் முழுமையாகக் கூறுவதே அறிதாகிவிட்டது. இதனை வாழ்க்கையில் பயன்படுத்துபவர்களாக இருந்தால் சமுதாயச் சீர்கேடுகள் ஏன் நடைபெறுகின்றது? தேர்வு நோக்கத்திற்காக கற்கின்றனர்; கற்பிக்கப்படுகின்றனர். இதனால், மாணவர்கள் இதை ஒரு சுமையாகக் கருதுகின்றனர். சுமையாகக் கருதுவதை தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துவார்கள். இல்லை என்பதே உண்மை என்றார்.

### 2) திருக்குறள் சார்ந்த கேள்விகள் வழி மாணவர்களின் சிந்தனைத் திறன்

இந்த ஆய்வின் இரண்டாவது நோக்கமானது, திருக்குறள் கற்பித்தலில் கேள்வி வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துவது ஆகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வவகையில் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த அவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தப்பட்டது. சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியலின் துணைக்கொண்டு பலதரப்பட்ட கேள்விகள் கேட்பதன் வழி இத்திருக்குறள் வகுப்பு நடத்தப்பட்டது.

மொத்தம் ஆறு திருக்குறள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. படிவம் 1-இல் வரையறுக்கப்பட்ட மூன்று திருக்குறள்களும் படிவம் 2-இல் வரையறுக்கப்பட்ட மூன்று திருக்குறள்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு வாரத்திற்கும் ஒரு குறள் வீதம் ஆறு வாரங்களுக்கு இந்த வகுப்பு நடத்தப்பட்டது. ஒவ்வொரு வகுப்பின் போதும் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அத்திருக்குறளைச் சார்ந்த கேள்விகள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு வகுப்பின் முடிவிலும் மாணவர்கள் கற்ற குறளுக்கான கேள்விகள் வழங்கப்பட்டன.

அவற்றை ஆய்வாளர் திருத்தி மாணவர்களிடமே வழங்கினார். ஒவ்வொரு வகுப்பும் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையிலே நடத்தப்பட்டது.

ஆறு வாரத் திருக்குறள் வகுப்பிற்குப் பின் மாணவர்களிடையே திருக்குறளின் பால் ஏற்பட்ட முன்னேற்றங்களும் அவர்களின் சிந்தனைத் திறனில் ஏற்பட்ட மாற்றங்களும் பின்னறித் தேர்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட புளூமின் அறிவுசார் முறைப்பாட்டியலின் துணைக்கொண்டு பலதரப்பட கேள்விகள் கேட்பதன் வழி மாணவர்களின் சிந்தனைத் திறனில் ஏற்பட்ட மாற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

பின்னறித் தேர்வில் மொத்தம் 20 கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன்னறித் தேர்வில் வழங்கப்பட்ட படிவம் ஒன்றுக்கான கேள்விகளோடு படிவம் இரண்டுக்கான கேள்விகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆக, படிவம் 1 குறள் தொடர்பான 10 கேள்விகளும் படிவம் 2 தொடர்பான 10 கேள்விகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மாணவர்களின் தாழ்நிலைச் சிந்தனை மற்றும் உயர்நிலைச் சிந்தனை திறன் எனும் இரு பிரிவுகளாகப் பிரித்து சேகரிக்கப்பட்ட தரவுகள் அட்டவணையில் புகுத்தப்பட்டு அதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஒவ்வொரு குறளுக்கும் ஓர் அட்டவணை என்று ஆறு அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

குறள் ஒன்று : ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கம் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

அட்டவணை 1

*ஈன்ற பொழுதிற் எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | ✓ | - | - | ✓ |

மேற்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 1 படிவம் ஒன்றின் முதல் குறள் தொடர்பான பின்னறித் தேர்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆகும். இக்கேள்விகள் முன்னமே முன்னறித் தேர்வில் கேட்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. நடவடிக்கைகளுக்குப் பின்

மாணவர்களின் சிந்தனைத் திறனில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை ஒப்பீடு செய்ய இது வழிவகுக்கிறது. மேலும் ஒரே கேள்விகளைக் கொடுப்பதன் மூலம் மாணவர்களிடையே ஏற்பட்ட மாற்றங்களை இன்னும் துல்லியமாகத் தெரிந்து கொள்ள முடியும்.

அவ்வகையில் முன்னறித் தேர்வில் தாழ்நிலைச் சிந்தனை கேள்விக்கு 5 மாணவர்களும் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்கு 3 மாணவர்கள் மட்டுமே சரியாகப் பதிலளித்துள்ளனர். ஆனால், திருக்குறளை கேள்வி கேட்டல் வழி கற்பித்தப் பின் தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்கு 8 மாணவர்களும் உயர்நிலைச் சிந்தனைக் கேல்விகளுக்கு 6 மாணவர்களும் துல்லியமான பதில்களை அளித்துள்ளனர். உதாரணத்திற்கு, இக்குறளை உன் வாழ்க்கையில் எவ்வாறு நீ அமல்படுத்துவாய் என்ற கேள்விக்கு மாணவர் எழுதிய பதில்,

> *'நான் படிக்கும் பருவத்தில் மட்டும் நற்குணம் கொண்ட மாணவனாக இல்லாமல் வாழும் காலம் வரை நற்குணம் உடையவனாகத் திகழ்ந்து என்னை ஈன்றெடுத்த தாய்மடியை உச்சிக்குளிர வைப்பேன். மேலும் ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்தும், பிறருக்கு எந்தத் தீங்கும் நினைக்காமல் வாழ்ந்தும், சமுகத்தில் ஒரு நல்ல நிலையில் இருந்து என் தாய் என்னைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சி அடைவதற்கு காரணமாகுவேன்'.*

என்று பதிலளித்துள்ளார். இதில் மாணவரின் சொந்தக் கருத்து வெளிப்பட்டுள்ளது. மாணவர்களின் உயர்நிலை சிந்தனையின் வெளிப்பாட்டினை அறியமுடிகின்றது. எதிர்காலத்தைப் பற்றியச் சிந்தனை அவர்களிடம் வெளிப்பட்டிருந்தது.

குறள் இரண்டு : தீயினாற் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. (129)

அட்டவணை 2
*தீயினாற் சுட்டபுண் எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |

மேற்காணும் அட்டவணை 2 படிவம் 1-இல் வரையறுக்கப்பட்ட இரண்டாம் குறள் தொடர்பான கேள்விக்குச் சேகரிக்கப்பட்டத் தரவுகளைக் காட்டுகின்றது. முன்னறித் தேர்வில் இக்குறளுக்கு 7 மாணவர்கள் தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விக்கும் 4 மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விக்கும் பதிலளித்திருந்தனர். ஆனால், திருக்குறள் வகுப்பிற்குப் பின் தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விக்கு 10 மாணவர்களும் உயர்நிலைச் சிந்தனை கேள்விக்கு 7 மாணவர்களும் பதிலளித்திருந்தனர். மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறன் மேம்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறள் மூன்று : ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (131)

அட்டவணை 3

*ஒழுக்கம் விழுப்பம் எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |

மேற்காணும் அட்டவணை 3 படிவம் 1-இல் இடம்பெற்றுள்ள மூன்றாவது குறள் தொடர்பான கேள்விகளுக்கு மாணவர்கள் பதிலளித்தப் பின்னறித் தேர்வுக்கான முடிவாகும். அட்டவணையின் படி, தாழ்நிலைச் சிந்தனை கேள்விகளுக்கு அனைத்து மாணவர்களும் சரியாகப் பதிலளித்துள்ளனர் என்பதனை அறியமுடிகிறது. உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்கு 8 மாணவர்கள் பதிலளித்துள்ளனர். முன்னறித் தேர்வில் இக்கேள்விகளுக்கு 10 மாணவர்களில் 6 மாணவர்கள் மட்டும் தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தனர். 4 மாணவர்கள் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தனர். பின்னறித் தேர்வின் முடிவுகளில் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனில் ஏற்பட்ட மாற்றங்களை மிக துல்லியதமாகக் காணமுடிகின்றது. திருக்குறள் கற்பித்தல் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. உதாரணத்திற்கு, ஒழுக்கம் எவ்வாறு நம் வாழ்க்கையை வழிநடத்துகின்றது? எனும் கேள்விக்கு மாணவர் எழுதிய பதில்:

*‘வாழ்க்கை என்பது இறப்புக்கு ஆள் சேர்க்கும் போராட்டம் ஆகும். இதன் காரணம், நல்ல ஒழுக்கம் உடையவரின் இறப்புக்குப் பலரும், குற்குணம் கொண்டவரின் இறப்புக்குச் சிலரும் வருவார்கள் என்பது அனைவராலும் அறியப்பட்ட ஒன்று. ஒழுக்கம் உள்ள ஒரு மனிதன் இச்சமுதாயத்தில் எந்த நிலையில் ஏற்றுக்கொண்டு மதிக்கப்படுகின்றான் என்பதை நிர்ணயிக்கிறது. இதைதான் வள்ளுவரும் ஒழுக்கத்தை உயிருக்கும் மேலாக கருத வேண்டும் என்று எடுத்துரைக்கிறார். எனவே வாழும் காலத்தில் ஒழுக்கம் மிக்க மனிதனாக வாழ வேண்டும். அந்த ஒழுக்கமே நம் வாழ்க்கையை வழிநடத்தும்’.*

இம்மாணவர் எழுதிய பதில் அவரின் உயர்நிலைச் சிந்தனை எவ்வகையில் வெளிப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது. திருக்குறள் கற்றலின் வழி ஒருவரின் சிந்தனை ஆற்றல் மேம்படும் என்பது உறுதி.

குறள் நான்கு : புகழ்பட வாழாதார் தந்நோவர் தம்மை
இகழ்வாரை நோவது எவன். (237)

அட்டவணை 4

*புகழ்பட வாழாதார் எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

மேற்காணும் அட்டவணை 4-இல் படிவம் இரண்டில் மாணவர்களுக்கு வரையறுக்கப்பட்ட முதல் குறளாகும். படிவம் இரண்டில் வரையறுக்கப்பட்ட கேள்விகள் பின்னறித் தேர்வில் மட்டுமே கேட்கப்பட்டன. கற்பித்தப் பின்னரே பின்னறித் தேர்வின் வழி மாணவர்களின் சிந்தனைத் திறனில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை கண்டறிய முடிந்தது.

அவ்வகையில், இக்குறளுக்கான தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்கு 10 மாணவர்களும் சரியாகப் பதிலளித்திருந்தனர். தொடர்ந்து உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளுக்கு 10 மாணவர்களில் 9 மாணவர்கள் சிறப்பான முறையில் பதிலை எழுதியிருந்தனர். உதாரணத்திற்கு,

> *'வாழ்க்கையில் புகழ்பட வாழ்வதற்கு நான் முதலில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவேன். ஏனென்றால் கல்வி ஒன்றே விலைமதிக்கப் படாத செல்வம் ஆகும். அச்செல்வத்தைப் பெற்ற பின் மற்ற செல்வங்களை வாழ்க்கையில் பெற்று புகழ்பட வாழ்வேன். எனவே படிப்பில் சிறந்த விளங்க முயற்சிகள் எடுப்பேன். இம்முயற்சியே நான் வாழ்வில் புகழ்பட வாழ்வதற்குத் துணைப்புரியும்'.*

வாழ்க்கையில் புகழ்பட வாழ்வதற்கு நீ எம்மாதிரியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்? எனும் கேள்விக்கு மாணவர் அளித்த பதிலாகும். இம்மாணவரின் உயர்நிலைச் சிந்தனையின் வெளிப்பாட்டினை இவரின் பதில் வழி கண்டறிய முடிகிறது. திருக்குறள் கற்பித்தல் வழி நிச்சயமாக மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பது திண்ணம்.

குறள் ஐந்து : இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். (415)

அட்டவணை 5
*இழுக்கல் உடையுழி எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

மேற்காணும் அட்டவணை 5, இரண்டாம் படிவத்திற்கான இரண்டாவது குறள் தொடர்பாக மாணவர்கள் அளித்த பதில்களுக்கான தரவுகளைக் காட்டுகின்றது. இக்குறளுக்கும் தாழ்நிலைச் சிந்தனைக் கேள்விகள் மற்றும் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகள் ஆகிய இரு பிரிவுகளில் இருந்தும் கேள்விகள் கேட்கப்பட்டன. இத்திருக்குறளுக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து மாணவர்களும் சரியாகப் பதிலளித்திருந்தனர். மேலும் மாணவர்களின் சிந்தனைத் திறனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது நிருபிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு,

> *'இக்குறள் வழி கிடைக்கப்பெறும் படிப்பினையானது, நமக்கு துன்பம் நேரிடும்போது சான்றோரின் அறிவுரை துணை நிற்கும் என்பதாகும். நாம் சான்றோரின் அறிவுரையை உள்வாங்கிக் கொள்ளும் போது அது எச்சமயத்திலும் நமக்கு உதவியாக இருக்கும்'.*

மேற்குறிப்பிட்டுள்ள பதில் இத்திருக்குறள் வழி கிடைக்கப்பெறும் படிப்பினையை விளக்குகின்றது. மாணவர்கள் இக்குறளை நன்கு கற்றறிந்தப் பின்னரே கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறளை கற்பதன் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறன் மேம்படும் என்றால் அது மிகையாகாது.

குறள் ஆறு : ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (594)

அட்டவணை 6

*ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் எனும் திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களின் தரவுகள்*

| **சிந்தனைத் திறன் (கேள்வி)** | **மாணவர்கள்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** |
| தாழ்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| உயர்நிலைச் சிந்தனை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

மேற்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 4.9 படிவம் 2-இல் வரையறுக்கப்பட்ட மூன்றாவது திருக்குறள் தொடர்பான கேள்விகளுக்கு மாணவர்கள் அளித்த பதில்களின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள் ஆகும். இத்திருக்குறள் தொடர்பாகக் கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் 10 மாணவர்களும் மிகச் சரியாகவும் சிறப்பாகவும் பதிலளித்துள்ளனர் என்பது அட்டவணையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். திருக்குறள் கற்பித்தல் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியும் என்பது நிருபணமாகியுள்ளது. உதாரணத்திற்கு,

> *'ஒரு மாணவனின் வாழ்க்கையில் ஊக்கமானது மிக முக்கியம். ஊக்கம் இருந்தால் மட்டுமே அவனால் பல முயற்சிகள் எடுத்து படிப்பில் சிறந்து விளங்க முடியும். பல முறை தோல்வியுற்றாலும் ஒருவனிடம் ஊக்கம் இருந்தால் அவன் மீண்டும் முயற்சிப்பான். மேலும் இந்த ஊக்கமே, அவன் படித்து முடித்தப்பின் ஒரு நல்ல நிலையில் வாழ வழிவகுக்கும்'.*

மேற்காணும் பதில் மாணவர்களின் வாழ்வில் ஊக்கம் எவ்வளவு அவசியம் என்பதனை விளக்குகின்றது. மாணவர் எழுதிய பதில் வழி அவரின் உயர்நிலைச் சிந்தனைத் திறன் விரிவடைந்துள்ளது என்பதை காட்டுகின்றது. எனவே திருக்குறள் கற்பித்தல் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியும் என்பது உறுதி.

**முடிவுரை**

மாணவர்களிடையே திருக்குறள் கற்றல் கற்பித்தல் வழி அவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இம்மாற்றம் திருக்குறள் வகுப்பு மற்றும் குறள் சார்ந்த கேள்விகளின் வழி கண்டறியப்பட்டது. தொடர்ந்து, திருக்குறளில் மாணவர்களின் ஆளுமையைப் பற்றி அறிவதற்கு ஆசிரியரிடம் நடத்தப்பட்ட நேர்காணல் துணைப்புரிந்தது. மேலும் மாணவர்களிடம் நடத்தப்பட்ட முன்னறித் தேர்வும் இதற்கு உதவியாக இருந்தது. திருக்குறளில் மாணவர்களின் ஆளுமை குன்றி இருப்பதை இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மாற்றி அமைப்பதன் வழி மாணவர்களின் திருக்குறள் ஆளுமையை மேம்படுத்த முடியும்.

இதனையடுத்து, மாணவர்களிடையே உயர்நிலைச் சிந்தனையைப் போதிக்கும் கடமை ஆசிரியரிடம் மட்டும்தான் உள்ளது. எனவே ஆசிரியர் முதலில் உயர்நிலைச் சிந்தனை என்றால் என்ன என்பதனை அறிந்திருக்க வேண்டும். பின்னரே அதனை மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். உயர்நிலைச் சிந்தனைத் திறன் இல்லாத ஆசிரியர்களால் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியாது.

ஆகையால், முதலில் ஆசிரியர்கள் உயர்நிலைச் சிந்தனைத் திறனின் முக்கியத்துவத்தை அறிந்து பின்பு அதனைத் தங்கள் கற்பித்தலில் அமல்படுத்த வேண்டும்.

மாணவர்கள் கற்கும் இந்த உயர்நிலைச் சிந்தனையானது பள்ளிப் பருவத்தில் மட்டும் இவர்களுக்கு உதவாமல் எதிர்காலத்திலும் துணைநிற்கும் என்பது திண்ணம். எனவே மாணவர்களிடத்தில் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதில் அனைத்துத் தரப்பினரும் தங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். கற்றல் செயல், கற்போரின் போக்கு, கற்றல் விளைவுகள், கற்பிக்கும் முறை, இவற்றினூடாக மாணவர்களிடையே உயர்நிலைச் சிந்தனையை ஊருவாக்க முடியும் (அண்டர்சன், கார்த்வோல் (2011) (Anderson & Karthwohl 2011).[7]

நவீன தொழில்நுட்ப அரங்கில், உலகமய மாற்றங்களுக்கு மத்தியில் கல்வித் துறை மிகப்பெரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. மக்களின் வாழ்க்கை முறை வளர்ச்சியில் இன்றைய கல்வி முறை பல புதிய பரிணாம வளர்ச்சியை அடைந்து வருகிறது. ஒரு நாட்டின் கல்வித் துறை மேம்பாட்டிற்கு முக்கியப் பங்காற்றுவது கற்றல் கற்பித்தல் முறையாகும். இத்தகைய சூழலில், நாட்டின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தவும் அதனை உலகமயமாக்கவும் உயர்நிலைச் சிந்தனைத் திறனின் பங்கு இன்றியமையாதது. இலக்கியக்கல்வி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேலோங்குவதற்கு வழிவகுக்கிறது. அவ்வகையில் திருக்குறள் கற்றலின் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறன் மேம்படும் என்பது இவ்வாய்வின் வழிக் கண்டறியப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. Palanivelu, N. (2006). *Ways to Teach Senthamil (செந்தமிழ் கற்பிக்கும் முறைகள்).* Thanjavur: Aiya Nilaiyam.
2. Roslan Baki. (2013*). Intelligence creativity thinking skills (Kepintaran daya cipta kemahiran berfikir)*. Kuala Lumpur: Utusan Publications & Distributors Sdn.Bhd.
3. Ani Haji Omar. (2013). *Conscience of Malaysian poet in modern Malay poems from perspective theory SPB4L (Suara hati penyair Malaysia dalam puisi Melayu moden dari perspektif teori SPB4L).* Perak: Sultan Idris Education University Publications.
4. Bloom B. S. (1956). *Taxanomy of educational objectives, handbook 1, cognitive domain.* New York: Longman Green and Company.
5. Rajendran, N. S. (2008). *Literature as a medium in teaching higher order thinking skills.* National Research Proceeding Seminar and Development in Education 2000, Teacher Education Devision, Ministry of Education Malaysia (Kesusasteraan sebagai wahana mengajar Kemahiran Berfikir Aras Tinggi. Prosiding Seminar Kebangsaan Penyelidikan dan Pembangunan dalam Pendidikan 2000, Bahagian Pendidikan Guru, Kementerian Pendidikan Malaysia). http://nsrajendran.tripod.com/Papers/sasteraHOTskills.pdf.
6. Hesly, S. (1972). *Challenging questions in the literature classroom*. New York: Longman Green and Company.
7. Anderson, R. C. & Karthwohl, P. D. (2011). *A schema theoretic view of basic processes in reading comprehension.* In P.D. Pearson (E.d). Handbook of reading research (pp.255-291). New York: Longman.
8. Paul, L.B. (2008). Education and Learning to Think. Washington De: National Academy Press.

9. Manimaran, K. (2017). *New ideas in 21st century teaching learning (21- ஆம் நூற்றாண்டுப் பயிற்றியல் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள்).* Malaysia: Tamil Language Books Institute.
10. Ministry of Education Malaysia. (2012). *Preliminary report on the Malaysia Education Development 2013 – 2025 (Plan Laporan Awal Pelan Pembangunan Pendidikan Malaysia 2013 – 2025).* Putrajaya.

**Citation in Tamil**
ரெனித்தா பிரேரா வின்சன். (2019). திருக்குறள் கற்றலின் வழி படிவம் 2 மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல். *முவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 3*(1), 96-110. https://doi.org/10.33306/mjssh/08

**Citation in Tamil @ Romanised**
Renita Prera Winsen. (2019). Thirukkural kadralin vali padivam 2 maanavarkalin uyarnilaic sintanait thiranai meempaduttuyal. *Muallim Journal of Social Science and Humanities, 3*(1), 96-110. https://doi.org/10.33306/mjssh/08

**Citation in English**
Renita Prera Winsen. (2019). Improving the level of hots (higher order thinking skills) of form 2 students by learning Thirukkural. *Muallim Journal of Social Science and Humanities, 3*(1), 96-110. https://doi.org/10.33306/mjssh/08